


ஹஜ் செய்முறை விளக்கம்

Haad - Society
of Islamic Guidance
in Unaizah

جمعية هاد
للدعوة والإرشاد
وتوعية الجاليات في عنيزة

ஹாத் அழைப்பு மையம் உனைஸா – சவுதி அரேபியா



புனித ஹஜ்

இஸ்லாத்தின் கடமைகளில் ஒன்று

கண்ணியமிகு மக்கா



அல்லாஹ் இந்நகரத்தின் கண்ணியத்தை வெளிப்படுத்தும் விதமாக இதன் மீது அல்குர்ஆனின் பல இடங்களில் சத்தியம் செய்கிறான்.


பாதுகாப்புப் பெற்ற, பாதுகாப்பளிக்கும் இந்நகரத்தின் மீது சத்தியமாக! (அல்குர்ஆன் 95:3)

இந்நகரத்திற்கு இப்ராஹீம் செய்த பிரார்த்தனையை அல்லாஹ் குறிப்பிடுகிறான்.

என் இறைவா இந்த நகரத்தை பாதுகாப்புப் பெற்றதாக, பாதுகாப்பு அளிக்கக்கூடியதாக ஆக்குவாயாக! (அல்குர்ஆன் 14:35)

நபி (ஸல்) ஹிஜ்ரத்திற்கு முன் மக்காவை நோக்கி கூறினார்கள்:

அல்லாஹ்வின் மீது சத்தியமாக நிச்சயமாக நீ **அல்லாஹ்வின் பூமிகளில் மிகச் சிறந்ததாகும். அல்லாஹ்வின் பூமிகளில் எனக்கு மிக விருப்பமானதாகும்.** உன்னிலிருந்து நான் வெளியேற்றப் பட்டிருக்கவில்லையென்றால் உன்னை விட்டு வெளியேறி இருக்க மாட்டேன். (அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு அதீ(ரலி) நூல்; ஸுனன் இப்னு மாஜா)


புனிதமிகு கஅபா

புனிதமிகு கஅபா

கஅபா இது பழமை வாய்ந்த அல்லாஹ்வின் வீடாகும். உலகில் உள்ள முஸ்லிம்கள் அனைவரும் இவ்வீட்டை நேசிக்கின்றனர். ஒவ்வொரு நாளும் ஐந்து முறை இவ்வீட்டை நோக்கியே பணிவுடனும் பயத்துடனும் முஸ்லிம்கள் அல்லாஹ்வை தொழுகின்றனர். ஹஜ் மற்றும் உம்ரா வணக்கங்களை நிறை வேற்றுவதற்காக தூர தூரமான நாடுகளிலிருந்து முஸ்லிம்கள் அங்கு வருகின்றனர். கஅபாவின் சிறப்பைப் பற்றி குர்ஆனிலும் ஹதீஸ்களிலும் உயர்வாக கூறப்பட்டுள்ளது.

அல்லாஹ் கூறுகிறான்:

நிச்சயமாக மக்கள் அல்லாஹ்வை வணங்குவதற்காக முதன் முதலில் அமைக்கப்பட்ட ஆலயம் பக்கா எனும் மக்காவில் உள்ளதாகும். அது இறையருள் நிறைந்ததும் உலகத்தாருக்கு நேர்வழியுமாகும். அதில் தெளிவான அத்தாட்சிகளும் இருக்கின்றன. இப்ராஹீம் நின்ற இடமும் இருக்கிறது. எவர் அதில் நுழைகிறாரோ அவர் (பாதுகாப்பு பெற்று அச்சமற்றவராகி விடுகின்றார். (அல்குர்ஆன் 3:96,97)

Haad - Society of Islamic Guidance in Unaizah
جمعية هداد للدعوة والإرشاد وتوعية الجاليات في عنيزة

ஹஜ் இஸ்லாமின் ஐந்து கடமைகளில் ஒரு கடமையாகும்

அல்லாஹ் கூறுகிறான்: ஆகவே, அங்கு பயணம் செல்ல சக்தியுடைய மனிதர்கள் மீது அல்லாஹ்வுக்காக அந்த ஆலயத்தை ஹஜ் செய்வது கடமையாகும். எவரேனும் (இதை) நிராகரித்தால் (அல்லாஹ்வுக்கு ஒன்றும் குறைந்து விடுவதில்லை. ஏனென்றால், நிச்சயமாக அல்லாஹ் உலகத்தாரிடம் தேவையற்றவனாக இருக்கிறான். (அல் குர்ஆன் 3:97)

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) கூறினார்கள். இஸ்லாம் ஐந்தின் மீது அமைக்கப்பட்டுள்ளது. (அவை):

நிச்சயமாக வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் அறவே இல்லை; நிச்சயமாக முஹம்மது அல்லாஹ்வுடைய தூதராவார்கள் என்று சாட்சி சொல்வது.

இஸ்லாத்தின் கடமைகள்

தொழுகையை நிலைநாட்டுவது

காபா இறையில்லம் சென்று ஹஜ் செய்வது

ஜகாத்து கொடுப்பது

ரமலானின் நோன்பு வைப்பது

ஹஜ் இஸ்லாமின் ஐந்து கடமைகளில் ஒரு கடமையாகும்

ஹஜ் உடலாலும் பொருளாலும் வசதி பெற்றவரின் மீது வாழ்க்கையில் ஒருமுறை கடமையாகும்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் எங்களுக்கு பிரசங்கம் நிகழ்த்தினார்கள். மக்களே! உங்கள் மீது ஹஜ் கடமையாக்கப்பட்டது என்று கூறினார்கள். **அக்ரஉ இப்னு ஹாபிஸ்** என்ற நபித்தோழர் எழுந்து அல்லாஹ்வின் தூதரே ஒவ்வொரு ஆண்டிலுமா (ஹஜ் செய்யவேண்டும்)? என்று கேட்டார். நான் அப்படித்தான் என்று கூறிவிட்டால் அது அவ்வாறே கடமையாகிவிடும். அப்படி கடமையானால் நீங்கள் அதை நிறைவேற்ற மாட்டீர்கள். அதை நிறைவேற்றுவதற்கு ஆற்றலும் பெற மாட்டீர்கள். ஹஜ் ஒருமுறை தான். எவர் அதிகம் செய்வாரோ அது (அவருக்கு) உபரியாகும்.

அறிவிப்பாளர்: இப்னு அப்பாஸ் நூல்: முஸ்னத் அஹமத்)

ஹஜ் செய்வதன் சிறப்புகள்

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) கூறினார்கள்:

"எவர் (அல்லாஹ்வின்) வீட்டை ஹஜ்ஜு செய்து அதில் ஆபாசமாகப் பேசவில்லையோ, பாவம் செய்யவில்லையோ அவர் தன் தாய் பெற்றெடுத்த நாளில் இருந்ததைப் போன்று திரும்புகிறார்."

(அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) நூல்: ஸஹீஹுல் புகாரீ)

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) கூறினார்கள்:

நன்மை நிறைந்த ஹஜ்ஜுக்கு சொர்க்கத்தைத் தவிர வேறு கூலி இல்லை.

(அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) நூல்: ஸஹீஹ் முஸ்லிம்)

ஒருவர் தன்மீது ஹஜ் கடமையானவுடன் அதை விரைந்து நிறை வேற்ற வேண்டும். தாமதப்படுத்துவது கூடாது.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) கூறினார்கள்:

எவர் ஹஜ் செய்ய நாடிவிடுவாரோ அவர் (அதை நிறைவேற்ற) தீவிரம் காட்டட்டும் ஏனெனில், ஒருவரை நோய் பீடிக்கலாம்: வாகனம் (அல்லது செல்வம்) தவறிவிடலாம்; தேவைகள் குறிக்கிடலாம்.

(அறிவிப்பாளர்: இப்னு அப்பாஸ் (ரலி) நூல்: இப்னு மாஜா)

ஹஜ் மற்றும் உம்ராவை தொடர்ந்து செய்யுங்கள். அவை வறுமையையும் பாவங்களையும் நீக்கிவிடும், (கொள்ளனின்) துருத்தி இரும்பின் அசுத்தத்தை நீக்குவது போன்று. (அறிவிப்பாளர்: இப்னு அப்பாஸ் நூல்: திர்மிதி)

ஹஜ்ஜை எப்படி நிறைவேற்ற வேண்டும் ?

இத்தகைய உயர்ந்த வணக்கத்தை அல்லாஹ்வின் தூதர் அவர்கள் காண்பித்த வழிமுறையில்தான் செய்ய வேண்டும்.

அல்லாஹ் கூறுகிறான்:

நபியே கூறுவீராக! நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பவர்களாக இருந்தால் என்னைப் பின்பற்றுங்கள். அல்லாஹ் உங்களை நேசிப்பான், உங்கள் பாவங்களை மன்னிப்பான். அல்லாஹ் மகா மன்னிப்பாளன். பெரும் கருணையாளன். (3:31)

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) கூறினார்கள்: என்னிடமிருந்து உங்கள் ஹஜ் கிரியைகளை கற்றுக் கொள்ளுங்கள். இந்த ஆண்டுக்குப் பிறகு நான் உங்களைப் பார்க்காமல் இருக்கலாம். (ஜாபிர் (ரலி) நூல்: அஸ்ஸுனனுல் குப்ரா லில்பைஹக்கீ)

நபி அவர்கள் வழிகாட்டாத முறையில் நாம் வணக்க வழிபாடுகளை செய்தால் அந்த வணக்க வழிபாடுகள் அல்லாஹ்விடம் மறுக்கப்பட்டு நன்மையற்றதாக ஆகிவிடும்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) கூறினார்கள்:

எவர் நம் கட்டளையில்லாத ஒரு செயலை செய்வாரோ அந்த செயல் மறுக்கப்பட்டுவிடும்.

(அறிவிப்பாளர்: ஆயிஷா (ரலி) நூல்: ஸஹீஹ் முஸ்லிம்)

ஹஜ்ஜின் முதல் நிலை கடமைகள் (ருக்னுகள்)



1

அல்-இஹ்ராம் (ஹஜ்ஜு கிரியைகளில் நுழைவதற்கான நிய்யத்து செய்தல்)



2

அரஃபாவில் தங்குதல்



3

தவாபுல் இ(f)பாதா செய்தல்



4

ஸபா மர்வாவிற்கு இடையில் ஸஃயி செய்தல்

ருக்னு வணக்க வழிபாட்டின் முக்கிய அம்சமாகும்.
இந்த ஹஜ்ஜின் ருக்னுகளில் ஏதேனும் ஒன்றை விட்டாலும்
ஹஜ் நிறைவேறாது.

ஹஜ்ஜின் கடமைகள் (வாஜிபாத்)

1. மீகாத்திலிருந்து இஹ்ராமை ஆரம்பம் செய்தல்
2. அரஃபாவில் சூரியன் மறையும் வரை தங்குதல்
3. முஸ்தலிஃபாவில் இரவு தங்குதல்
4. ஹதிய் – பிராணிகளை அறுத்தல் (கிரான், தமத்து)
5. தலைமுடியை சிரைத்தல் அல்லது குறைத்தல்
6. பிறை 11, 12, 13 ல் மினாவில் இரவு தங்குதல்
7. மூன்று ஜம்ராக்களில் கல் எறிதல்
8. தவாபுல் விதாஉ (இறுதி தவாப்) செய்தல்

ஹஜ்ஜின் வாஜிபுகளில் எந்த ஒன்றையும் விடுவது கூடாது. அவ்வாறு ஒருவர் வாஜிபுகளில் ஏதேனும் ஒன்றை விட்டுவிட்டால் அவர் மீது **“தம்”** அதாவது குர்பானி கொடுப்பது கடமையாகிவிடும். அவரது ஹஜ் நிறைவேறிவிடும்.

ஹஜ் உடைய வகைகள்

1

தமத்துஉ

ஹஜ் உடைய மாதங்களில் முதலில் உம்ரா செய்து இஹ்ராமை முடித்து விட்டு, பிறகு புதிதாக இஹ்ராமை ஆரம்பித்து ஹஜ் செய்வது.

2

கிரான்

ஹஜ், உம்ரா இரண்டையும் ஒரே ஓர் இஹ்ராமில் நிறைவேற்றுவது.

3

இஃப்ராத்

ஓர் இஹ்ராமில் ஹஜ்ஜை மட்டும் நிறைவேற்றுவது.

ஹஜ் உடைய வகைகளில் தமத்துஉ ஹஜ்தான் சிறந்தது.

ஹஜ்ஜின் 3 வகைகளுக்கு மத்தியில் உள்ள வேறுபாடுகள்

1 தமத்துஉ

அல்லாஹ்ஹும்ம லப்பைக்க
உம்ரதன் முதமத்திஅன்
பிஹா இலல் ஹஜ்
உம்ராவின் தவாப், உம்ராவின் ஸயி
ஹஜ்ஜின் தவாப், ஹஜ்ஜின் ஸயி
ஹதிய் (குர்பானி)

2 கிரான்

அல்லாஹ்ஹும்ம லப்பைக்க
உம்ரதன் வ ஹஜ்ஜன்
தவாப் குதூம் (சுன்னாஹ்),
தவாப் இபாதாஹ், ஹஜ்ஜின்
ஸயி (**ஆரம்பத்தில்** / இறுதியில்)
ஹதிய் (குர்பானி)

3 இஃப்ராத்

அல்லாஹ்ஹும்ம
லப்பைக்க ஹஜ்ஜன்
தவாப் குதூம் (சுன்னாஹ்),
தவாப் இபாதாஹ், ஹஜ்ஜின்
ஸயி (**ஆரம்பத்தில்** / இறுதியில்)
ஹதிய் (குர்பானி) கிடையாது

ஹஜ் தமத்துஉ உடைய விளக்கம்

ஹஜ் தமத்துஉ : இதில் முதலில் உம்ரா செய்துவிட்டு இஹ்ராமிலிருந்து வெளி வந்தப்பிறகு ஹஜ் செய்ய வேண்டும். எனவே உம்ரா குறித்த விளக்கத்தை முதலில் அறிந்துக் கொள்வோம்.

உம்ரா செய்தல்

உம்ரா என்பது நான்கு செயல்களை உள்ளடக்கிய ஒரு இபாதத்தாகும்

1



இஹ்ராம்

2



தவாப்

3



ஸயீ


4



மழித்தல் /குறைத்தல்

Haad - Society of Islamic Guidance in Unaizah
جمعية هاد للدعوة والإرشاد وتوعية الجاليات في عنيزة

மீகாத் - குறிப்பிட்ட எல்லை



ஹஜ், உம்ராவிற்கு வருபவர்கள் **இஹ்ராமைப் பேணாமல்** இந்த **எல்லைகளைக் கடக்கக் கூடாது.**

அவ்வாறு கடந்து சென்றுவிட்டால் கண்டிப்பாக மீண்டும் அந்த எல்லைகளில் ஓர் எல்லைக்கு திரும்பிச் சென்று இஹ்ராமை பேணி, மக்காவிற்கு செல்ல வேண்டும்.

இல்லையெனில் குற்றப் பரிகாரமாக **ஓர் ஆட்டை** மக்காவில் அறுத்து அங்குள்ள ஏழைகளுக்கு பங்கிட வேண்டும்.

யலம்லம்

இது யமன் மற்றும் அதன் வழியாக வருபவர் களுக்கு உரியது. (இந்தியா)

கர்னுல் மனாஸில்

இது நஜ்து பகுதியைச் சேர்ந்தவர் களுக்கு உரியதாகும்.

தாது இர்க்

இது ஈராக் வாசிகளின் எல்லையாகும்.

அல்ஜுஹ்ஃபா

இது சிரியா, எகிப்து வழியாக வருபவர் களுக்கு உரியதாகும்

துல் ஹுலைபா

இது மதீனா வாசிகளுக்குரிய எல்லையாகும்

உம்ரா செய்முறை

1) மீகாத்தை வந்தடைந்தவுடன் செய்ய வேண்டியவை:

- குளிப்பது
- இஹ்ராம் ஆடை அணிவது
- ஆண்கள் இஹ்ராம் ஆடையை விடுத்து தலைமுடியிலும் தாடியிலும் நறுமணம் பூசிக்கொள்வது

2) பிறகு மனதில் உம்ரவிற்கான நிய்யத் செய்தவாறு

"அல்லாஹ்ஹும்ம லப்பைக்க உம்ரதன் முதமத்திஅன் பிஹா இலல் ஹஜ்" என்று சொல்ல வேண்டும்.

3) பிறகு மக்காவிற்கு செல்லும் வழிநெடுகிலும் அதிகதிகமாக தல்பிய்யா சொல்வது விரும்பத்தக்கதாகும்.

لَبَّيْكَ اَللَّهُمَّ لَبَّيْكَ لَبَّيْكَ لاَ شَرِيْكَ لَكَ لَبَّيْكَ

اِنَّ الْحَمْدَ وَالنِّعْمَةَ لَكَ وَالْمُلْكَ، لاَشَرِيْكَ لَكَ

பொருள்: உன் அழைப்பிற்கு பதில் அளித்து விட்டேன் அல்லாஹ்வே! உன் அழைப்பிற்கு பதில் அளித்து விட்டேன்! உன் அழைப்பிற்கு பதில் அளித்து விட்டேன்! உனக்கு இணை துணை அறவே இல்லை. உன் அழைப்பிற்கு பதில் அளித்து விட்டேன்! நிச்சயமாக புகழ், அருட்கொடை மற்றும் ஆட்சியதிகாரம் அனைத்தும் உனக்கே சொந்தமானவை. உனக்கு இணை துணை அறவே இல்லை.

உம்ரா செய்முறை



- மஸ்ஜிதுல் ஹரமில் நுழையும் போது பின்வரும் துஆவை ஓதவேண்டும்

بِسْمِ اللهِ وَالصَّلاةُ وَالسَّلامُ عَلَى رَسُوْلِ اللهِ ، اَللَّهُمَّ افْتَحْ لِى أَبْوَابَ رَحْمَتِكَ

- தல்பியாவை கஅபா வரும்வரை அதிகமாக கூறவேண்டும். கஅபாவை வந்தடைந்தவுடன் அவற்றை நிறுத்திட வேண்டும்.
- ஆண்களுக்கு தவாபில் **இழ்திபாஉ** செய்வது விரும்பத்தக்கதாகும். வலது கை புஜம் திறந்தவாறு இஹ்ராமின் மேலாடையை அணிவதற்கு **இழ்திபாஉ** என்று சொல்லப்படும்.
- அடுத்து தவாபை ஆரம்பிப்பதற்காக ஹஜருல் அஸ்வதை நோக்கி செல்ல வேண்டும். பிறகு வலது கையால் **ஹஜருல் அஸ்வதை தொட்டு முத்தமிட்டவாறு "பிஸ்மில்லாஹ் வல்லாஹு அக்பர்"** என்று கூறவேண்டும்.

அவ்வாறு **முடியவில்லை** என்றால் ஹஜருல் அஸ்வதை நோக்கி கையால் **செய்கை செய்தவாறு "பிஸ்மில்லாஹ் வல்லாஹு அக்பர்"** என்று கூறவேண்டும்.

ஹஜருல் அஸ்வதிலிருந்து தொடங்கி ஹஜருல் அஸ்வது வரும்வரை ஏழு சுற்றுகளாக தவாபை மேற்கொள்ள வேண்டும்.

தவாபில் அல்லாஹ்வை அதிகமாக நினைவுகூறி திக்ருசெய்திலும், துஆ கேட்பதிலும், குர்ஆன் ஓதுவதில் ஈடுப்பட வேண்டும்.
“கஃபாவை தவாப் செய்வது, ஸபா, மர்வாவுக்கிடையே ஸஃயி செய்வது, கல்லெறிவது ஆகியவை அல்லாஹ்வின் நினைவை நிலை நாட்டுவதற்காகவே ஏற்படுத்தப்பட்டுள்ளது” என்று நபி (ஸல்) கூறியுள்ளார்கள். **(நூல்: அபுதாவுத், திர்மிதீ)**

உம்ரா செய்முறை

❖ முடிந்தால் தவாப்பின் முதல் மூன்று சுற்றுகளில் **ரமல்** செய்வது ஆண்களுக்கு விரும்பத்தக்கதாகும். கால் எட்டுகளை நெருக்கமாக எடுத்துவைத்து வேகமாக நடப்பதற்கு ரமல் என்று சொல்லப்படும்.

❖ ருக்னுல் யமானியிலிருந்து ஹஜருல் அஸ்வத் வரும்வரை **"ரப்பனா ஆத்தினா (f)பித் துன்யா ஹஸனதவ் வ(f)பில் ஆகிரத்தி ஹஸனதவ் வகினா அதாபன் நார்"**


❖ தவாபில் ஹஜருல் அஸ்வதை கடக்கும்போதெல்லாம் அதை கையால் தொட்டு முத்தமிட்டு **அல்லது** செய்கை செய்து "அல்லாஹு அக்பர்" என்று கூறவேண்டும்.

❖ தவாபை முடித்த பின்பு **மகாமு இப்ராஹீமுக்கு** சென்று ﴿ وَاتَّخِذُوا مِن مَّقَامِ إِبْرَاهِيمَ مُصَلًّى ﴾ "வத்தகி(dhu)து மிம் மகாமி இப்ராஹீம முசல்லா" என்று ஓதிட வேண்டும்

பிறகு மகாமு இப்ராஹீமுக்கு பின்னால் நின்று இரண்டு ரக்அத்துகள் தொழுதிட வேண்டும்.

முதலாவது ரக்அத்தில் சூரத்துல் பாத்திஹாவிற்கு பின் குள் யா அய்யுஹல் காபீரூனும்

இரண்டாவது ரக்அத்தில் பாத்திஹாவிற்கு பின் குள் ஹுவல்லாஹு அஹதும் ஓதிட வேண்டும்.



மகாமு இப்ராஹீமுக்கு பின்னால் தொழுதிட இயலவில்லையெனில் பள்ளியின் எந்த பகுதியிலும் தொழுதிடலாம்.

உம்ரா செய்முறை

❖ பிறகு ஏழுசுற்றுகள் ஸஃயி செய்வதற்காக ஸபா மர்வாவிற்கு செல்லவேண்டும்.

ஸபாவில் இருந்து மர்வாவிற்கு செல்வது ஒரு சுற்றாகும். மர்வாவில் இருந்து மீண்டும் ஸபா வருவது இரண்டாவது சுற்றாகும்

மேலும் **ஸஃயியை ஸபாவிலிருந்து** ஆரம்பிக்க வேண்டும்.

❖ ஸபாவை நெருங்கும் போது إِنَّ الصَّفَا وَالْمَرْوَةَ مِن شَعَائِرِ اللَّهِ

இன்னஸ் ஸபா வல் மர்வத்த மின்ஷஆ இரில்லாஹ் (பொருள்: ஸஃபாவும் மர்வாவும் அல்லாஹ்வின் சின்னங்களில் உள்ளவை யாகும்) எனும் வசனத்தை ஓதிட வேண்டும்.

❖ பிறகு ஸபாவின் மீது ஏறி நின்று கிப்லாவை முன்னோக்கி பின்வரும் திக்ரை ஓதவேண்டும்

اللهُ أَكْبَرُ اللهُ أَكْبَرُ اللهُ أَكْبَرُ لاَ اِلهَ اِلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيْكَ لَهُ

لَهُ الْمُلْكَ وَلَهُ الْحَمْدُ وَهُوَ عَلَي كُلِّ شَيْءٍ قَدِيْرٌ لاَ اِلهَ اِلاَّ اللهُ وَحْدَهُ أَنْجَزَ وَعْدَهُ وَ نَصَرَ عَبْدَهُ وَهَزَمَ الأَحْزَابَ وَحْدَهُ

லா இலாஹ இல்லல்லாஹு அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர்

லா இலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லா ஷரீக லஹு லஹுல் முல்கு வலஹுல் ஹம்து வஹுவ அலா குல்லி ஷையின் கதீர், லா இலாஹ இல்லல்லாஹு வஹ்தஹ், அன்ஜஸ வஅ;தஹ் வ நஸர அப்தஹ் வ ஹஸமல் அஹ்ஸாப வஹ்தஹ்


பிறகு கைகளை உயர்த்தியவாறு இயன்றளவு துஆச் செய்ய வேண்டும்.

இவ்வாறு **மூன்று முறை மேலுள்ள திக்ரை** ஓத வேண்டும். **அவற்றிற்கு இடையே துஆச்** செய்திட வேண்டும்.

உம்ரா செய்முறை

❖ பிறகு ஸபாவிலிருந்து மர்வாவிற்கு நடந்து செல்ல வேண்டும். ஸஃயி செய்யும் போது அதிகமாக திக்ருசெய்திலும், துஆ கேட்பதிலும், குர்ஆன் ஓதுவதில் ஈடுப்பட வேண்டும்.

பச்சை விளக்கு பகுதியை அடையும்பொழுது ஆண்கள் மட்டும் வேகமாக ஓடிட வேண்டும். அந்த பகுதியை கடந்த பிறகு சாதாரணமாக மர்வா நோக்கி நடக்க வேண்டும்.



❖ மர்வாவில் ஏறி நின்று கிப்லாவை நோக்கி ஸபாவில் செய்ததைப் போன்று மர்வாவிலும் திக்ர் மற்றும் துஆவை ஓதிட வேண்டும்.

இவ்வாறு ஏழு சுற்றுகளை நிறைவுசெய்திட வேண்டும்.

❖ ஸஃயியை முடித்தவுடன் ஆண்கள் தலைமுடியை முழுமையாக சிரைத்து அல்லது சரிசமமாக கத்தரித்துக் கொள்ள வேண்டும்.

பெண்கள் தங்களின் தலைமுடிகளில் இருந்து **விரல் நுனியளவு** குறைத்துக் கொள்ள வேண்டும்.

இஹ்ராமுடைய நிலையில் தடுக்கப்பட்டவை

அ - ஆண்கள் - பெண்களுக்குரிய தடைகள்

- உடலுறவு கொள்வது
- திருமணம் முடிப்பது அல்லது அது தொடர்பாகப் பேசுவது
- மன இச்சையுடன் கட்டியணைப்பது - முத்தமிடுவது
- தலைமுடியை அல்லது உடலின் பிற ரோமங்களைக் களைவது
- நகம் வெட்டுவது
- உடலிலோ ஆடையிலோ மறுமணம் பூசுவது
- வேட்டையாடுவது, அதற்கு உதவுவது
- கையுறை அணிவது

ஆ - ஆண்களுக்கு மட்டும் உரிய தடைகள்

- தலையை மறைப்பது (உடலோடு சேராத குடை, துணிமூட்டை போன்றவற்றால் தலையை மறைப்பதில் குற்றமில்லை)
- சட்டை, வேட்டி, பனியன், ஜுப்பா போன்ற வழக்கமான ஆடைகளை அணிவது

இ - பெண்களுக்கு மட்டும் உரிய தடை

- முகத்தை மறைக்கும் வகையில் புர்கா அணிவது

பிறை 8 - தர்வியா நாளின் அமல்கள்



பிறை 8 - தர்வியா நாளின் அமல்கள்

தர்வியா நாள் என்பது துல்ஹஜ் எட்டாம் நாள். இதன் பெயர் காரணம், ஹாஜிகள் இந்நாளில் தூரமான பயணத்திற்காகத் தேவையான தண்ணீரைத் தயாராக நிறைத்து வைத்துக் கொள்வார்கள் என்பதாகும். (தர்வியா: தண்ணீர் நிறைத்தல், தயார் செய்து வைத்தல்)

உம்ராவை முடித்துவிட்டு ஹஜ்ஜை எதிர்பார்த்து இருக்கும் ஹாஜிகள் **யவ்முத் தர்வியா (துல்ஹஜ் பிறை 8)** அன்று தாம் தங்கியிருக்கும் இடத்திலேயே **முற்பகல் நேரத்தில்** ஹஜ்ஜுக்காக நிய்யத் வைத்து மீண்டும் இஹ்ராமை ஆரம்பிக்க வேண்டும். ஆகவே, முன்பு போன்று இஹ்ராமுக்கு முன் செய்யவேண்டிய காரியங்களைச் செய்ய வேண்டும். அதாவது, குளிக்க வேண்டும். நறுமணம் பூச வேண்டும். **லப்பைக் ஹஜ்ஜன்** அதாவது ஹஜ்ஜுக்காக ஆஜராகி இருப்பதாக உரக்க சொல்ல வேண்டும். அத்துடன்,

லப்பை(க்)கல்லாஹும்ம லப்பைக் லப்பை(க்)க லா ஷரீக்க ல(க்)க லப்பைக்

இன்னல் ஹம்த வன் நிஅ;ம(த்)த ல(க்)க வல் முல்க் லா ஷரீக்க லக

உரத்த குரலில் அதிகமதிகமாக தல்பியா சொல்ல வேண்டும்

தாங்கள் தங்கியிருக்கும் இடங்களிலிருந்து புறப்பட்டு **ளுஹ்ர் தொழுகைக்குள் மினா சென்றடைய** வேண்டும். அங்கு பிறை 9 காலை வரை தங்கியிருக்க வேண்டும். இவ்வாறு **மினாவில் இரவு தங்குவது சுன்னாஹ்வாகும்**

அங்கு ளுஹர், அஸ்ர், மஃக்ரிப், இஷா ஆகிய தொழுகைகளை அவற்றிற்குரிய நேரங்களில் தொழ வேண்டும்.

4 ரக்அத் தொழுகைகளை 2 ரக்அத் ஆக சுருக்கித் தொழவேண்டும். ஏனெனில் நபி (ஸல்) அவ்வாறே தொழுதார்கள்.

கவனிக்கப்பட வேண்டிய முக்கிய அம்சங்கள்

அண்ணல் நபி(ஸல்) கூறியுள்ளார்கள்: ஒப்புக்கொள்ளப்பட்ட, புண்ணிய மான ஹஜ்ஜுக்கு **சுவனமே கூலி** ஆகும்.

- ❖ நீங்கள் சிறப்புக்குரிய நாட்களில், புனிதமான தலங்களில் இருக்கிறீர்கள். இந் நாட்களின் அமல்கள் அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பமானவை ஆகும்.
- ❖ ஒவ்வொரு வினாடியையும் நன்கு பயன்படுத்திக்கொள்ள ஆவல் கொள்ளுங்கள். அல்லாஹ்வுக்குக் கோபமூட்டும் செயல்களில் இருந்து உங்கள் உறுப்புகளைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.
- ❖ இந்தப் புனித தலங்கள் நன்மையைக்கொண்டு உங்களுக்காக சாட்சியம் சொல்லும் வகையில் நடந்து கொள்ளுங்கள்.
- ❖ நபி(ஸல்) அருளினார்கள்: ஹஜ் - உம்றாவுக்காக ஆஜராகி இருப்பதாக (தல்பியாவை) ஒருவர் முழங்கினாலோ, அல்லாஹ் பெரியவன் என்று முழங்கினாலோ அவருக்குச் சுவனபதியைக் கொண்டு நற்செய்தி சொல்லப்படுகிறது. **(நூல்: ஸஹீஹுல் ஜாமிஉ)**

எனவே, **அல்லாஹ் அக்பர், லா இலாஹ இல்லல்லாஹ், ஸுப்ஹானல்லாஹ்** போன்ற திக்ர்களை அதிகம் சொல்லிக் கொண்டிருங்கள்.

நற்குணத்துடன் நடந்து கொள்வது, ஹாஜிகளுக்குப் பணிவிடை செய்வது, அவர்களுக்குத் தொல்லை கொடுக்காதிருப்பது, அவர்களுடன் பொறுமையாக நடந்து கொள்வது ஆகிய செயல்களின் பேரில் உங்களுக்கு அல்லாஹ்விடத்தில் மகத்தான கூலி உண்டு என்பதை மறவாதீர்கள்.

بسلام آمنين
2022-1443

பிறை 9 - அரஃபா நாளின் அமல்கள்



அரஃபா நாள் ஹஜ்ஜின் மிகவும் முக்கியமான நாளாகும். நபி (ஸல்) கூறினார்கள்:

"ஹஜ் என்பது அரஃபா நாள்தான்"

பிறை 9 - அரஃபா நாளின் அமல்கள்

இந்நாள் ஹஜ்ஜின் மிகவும் முக்கியமான நாள் ஆகும். அடிப்படைக் கடமையை நிறைவேற்றும் நாள் ஆகும்.

நபி (ஸல்) கூறியுள்ளார்கள்: **"ஹஜ் என்பது அரஃபா நாள்தான் என்று!**

எனவே அந்நாளின் எந்த விநாடியும் வீணாகக் கழிந்து விடக்கூடாது. ஆயிஷா (ரலி) அறிவிக்கிறார்கள்: நபி (ஸல்) அவர்கள் அருளினார்கள்: **மிக அதிக அளவில் நரகத்திலிருந்து மனிதர்களை அல்லாஹ் விடுதலை செய்யும் நாள் அரஃபா நாளைத்** தவிர வேறில்லை. திண்ணமாக அல்லாஹ் (உலகின் பக்கம்) நெருங்கி வந்து தன் அடியார்கள் குறித்து மலக்குகளிடம் பெருமை பாராட்டிய வண்ணம், இவர்கள் எதனை விரும்புகிறார்கள்? என்று கேட்கிறான். **(நூல்: முஸ்லிம்)**

பிறை 9 அன்று ஸுப்ஹு தொழுதப் பிறகு, **சூரியன் நன்கு உதித்தப் பிறகு** அரஃபா நோக்கிப் புறப்பட வேண்டும். புறப்பட்டதிலிருந்து அரஃபாவில் கூடாரத்தை அடையும் வரை **தல்பியா மற்றும் தக்பீர்** உரக்கக் கூற வேண்டும். உரத்த குரலில் அதிகமதிகமாக தல்பியா சொல்ல வேண்டும்

அரஃபாவில் எங்கு வேண்டுமானாலும் தங்கலாம். ஏனெனில் நபி (ஸல்) கூறினார்கள்:

“நான் இந்த இடத்தில் நின்றுகொண்டிருக்கிறேன். அரஃபா முழுவதும் இவ்வாறு நிற்பதற்கான இடங்களே ஆகும்”

முடிந்தால் பகல் வெயில் சாயும் வரை நமிரா எனும் பகுதியில் தங்குவது சிறப்பு.

லுஹ்ர் மற்றும் **அஸ்ர்** தொழுகைகளை **லுஹ்ர் தொழுகையின் நேரத்தில்** இரண்டு இரண்டு ரக்அத்துகளாக தொழ வேண்டும்.

சூரியன் மறையும் வரை அரஃபாவில் தங்கி இருத்தல் வேண்டும்.

ஹஜ்ஜில் இருப்பவர்கள் அரஃபாவில் தங்கும் அன்று **நோன்பு நோற்பது** கூடாது.

மாலை நேரத்தில் துஆச் செய்தல் வேண்டும்



அரஃபா நாளின் மாலை ஆக ஆக இரு கரம் ஏந்தி கிப்லாவை முன்னோக்கி **மனம் உருகி துஆ கேட்பதில்** ஈடுபட வேண்டும்.

லா இலாஹ இல்லல் லாஹு வஹ்தஹு லா ஷரீக லஹு லஹுல் முல்கு வலஹுல் ஹம்து வஹுவ அலா குல்லி ஷையின் கதீர்

சூரியன் மறைந்த பின் முஸ்தலிஃபா நோக்கிப் புறப்படுதல்



சூரியன் மறைந்ததும் ஹாஜி முஸ்தலிஃபாவுக்கு செல்ல வேண்டும்.

அங்கு **மஃக்ரிப் தொழுகையுடன் இஷாவையும் சேர்த்து சுருக்கி** தொழ வேண்டும். நடுஇரவு வரையிலும் தொழுதிட முடியாமல் இஷா தப்பிப் போவதைப் பயந்தாலே தவிர! அப்படிப் பயந்தால் நடுஇரவுக்கு முன்பே இஷாத் தொழுகையைத் தொழுதிட வேண்டும்., எந்த இடத்திலானாலும் சரியே!

அதிகாலை நேரம் உதயமாகும் வரையில் முஸ்தலிஃபாவில் தங்கி இருக்க வேண்டும்.
அங்கு தொழுகை, திக்ர் போன்றவற்றில் ஈடுபடக்கூடாது, அப்படி இரவு நேரத்தைக் கழிக்கக் கூடாது. ஏனெனில் நபி(ஸல்) அவ்வாறு செய்யவில்லை.
பலவீனமானவர்கள், இயலாதவர்கள், பெண்கள் இரவின் நடுப்பகுதிக்குப் பிறகு அங்கிருந்து புறப்பட்டு மினா செல்ல அனுமதி உண்டு.
ஆனால் மற்றவர்கள் ஸுப்ஹு தொழும் வரையில் முஸ்தலிஃபாவில் தங்கியிருக்க வேண்டும்.
ஃபஜ்ர் உடைய நேரம் வந்தவுடன் 'அதான்' கூறி **சுன்னத்** தொழுது, பிறகு 'இகாமா' கூறி ஸுப்ஹு தொழுகையை நிறைவேற்ற வேண்டும்.

பிறை 10 – பெருநாள் தினத்தின் அமல்கள்



பிறை 10 – பெருநாள் தினத்தின் அமல்கள்

ஃபஜ்ர் தொழுத பிறகு **முடிந்தால்** முஸ்தலிஃபாவில் உள்ள **அல்மஷ்அருல் ஹராம்** எனும் மலைக்கருகில் நின்று (இப்போது பள்ளிவாசல் அமைந்துள்ள இடமாகும்), கிப்லாவை முன்னோக்கி நன்கு விடியும் வரை துஆ மற்றும் திக்ருகளில் ஈடுபட்டிருக்க வேண்டும்.

முடியவில்லையெனில் முஸ்தலிஃபாவில் எங்கு வேண்டுமானாலும் நின்று துஆ கேட்கலாம்.

பிறகு சூரியன் உதயமாவதற்கு முன்பாக புறப்பட்டு மினாவை நோக்கி செல்ல வேண்டும். **தல்பியா கூறி** அடக்கமாகவும் அமைதியாகவும் செல்ல வேண்டும்.

பாதையில் அல்லது **மினாவில் (விரல் நுனி அளவிலான)** ஏழு பொடி கற்களை எடுத்துக் கொள்ள வேண்டும்.

மினா சென்றடைந்தவுடன் **கடைசி ஜம்ராவான அகபாவிற்கு (பெரிய ஜம்ராவிற்கு)** செல்ல வேண்டும்.

அங்கு **தல்பியாவை** நிறுத்திவிட வேண்டும்.





بسلام
آمنين
2022 - 1443
ஜம்ரத்துல் அகபா/குப்ரா (பெரிய ஜம்ரா)
ممنوع عكس الحركة
NO OPPOSITE MOVEMENT
ஜம்ரத்துல் அகபா எனும் (பெரிய ஜம்ரா) மினாவிலிருந்து கடைசியாக மக்காவின் திசையில் அமைந்துள்ளது
وزارة الإعلام
Ministry of Media

பிறை 10 - பெருநாள் தினத்தின் அமல்கள்

ஜம்ரத்துல் அகபாவை முன்னோக்கி **மக்கா இடப்பக்கம் இருக்குமாறும், மினா வலப்பக்கம் இருக்குமாறும்** நின்று கொள்ள வேண்டும். இது **சுன்னாஹ்வாகும்**.

அவ்வாறு இயலாவிட்டால் ஜம்ராவின் எந்த திசையில் வேண்டுமென்றாலும் நின்று கொள்ளலாம்.

கையில் இருக்கின்ற ஏழு கற்களை ஒன்றன்பின் ஒன்றாக, தொடர்ச்சியாக, ஒவ்வொரு கல்லை எறியும்போதும் தக்பீர் (அல்லாஹு அக்பர்) கூறி எறியவேண்டும்.

பெரிய கற்களால் எறிவதும் கூடாது. **செறுப்பு அல்லது காலுறைகளை** எறிவதும் கூடாது.

இரவின் நடுப்பகுதிக்குப் பிறகு அனுமதி அளிக்கப்பட்டவர்கள் சூரியன் உதயமாவதற்கு முன்பே ஜம்ரத்துல் அகபாவில் கல் எறியலாம்.



- பிறகு தமத்துவு அல்லது கிறான் முறையில் ஹஜ்ஜு செய்யக்கூடியவர்கள் **ஹதிய் - பலிப்பிராணியை** அறுக்கவேண்டும்.
- தலைமுடியை மழிக்க வேண்டும். அல்லது குறைத்துக் கத்தரித்துக் கொள்ள வேண்டும். **மழிப்பதுதான் சிறந்தது.**

கல்லெறிதல், பலியிடுதல், தலைமுடி ஏறக்குதல் - இந்த மூன்று செயல்களில் குறைந்தது எந்த இரண்டை செய்வதன் மூலம் **இஹ்ராமின் கட்டுப்பாடுகளில் இருந்து முதல் கட்டமாக விடுபடுகிறார்.** வழக்கமான ஆடைகளை அணியலாம். நறுமணம் பூசிக்கொள்ளலாம். மனைவியுடன் கூடுவது தவிர உள்ள எல்லாக் கட்டுப்பாடுகளும் நீங்கிவிடுகின்றன.

- கஅபாவுக்குச் சென்று (ஹஜ்ஜுடைய) **தவாப் இ(f)பாதா** செய்ய வேண்டும் (இந்த தவாப்பில் **ரம்ல்** மற்றும் **இழ்திபாஉ** கிடையாது).
- பிறகு **ஹஜ்ஜுடைய ஸயீ** செய்ய வேண்டும்.
- இந்த தவாஃப் மற்றும் ஸயி மூலம் **இஹ்ராமின் கட்டுப்பாடுகள் முற்றாக விலகிவிடும்.**

பிறை 10 - பெருநாள் தினத்தில் செய்ய வேண்டிய அமல்கள் சுருக்கமாக

1

கல்லெறிதல்

2

பலியிடுதல்

3

மழித்தல்

4

தவாப், ஸயீ

பெருநாள் அன்று ஒரு அமலை **முற்படுத்தி** அல்லது **பிற்படுத்தி** செய்தது பற்றி நபி (ஸல்) அவர்களிடம் கேள்வி கேட்டபோது **முற்படுத்திப் பிற்படுத்திச் செய்வதால் குற்றமில்லை** என்றே பதில் சொன்னார்கள்.

அய்யாமுத் தஷ்ரீக் எனும் நாட்களின் அமல்கள்
(துல்ஹஜ் பிறை 11, 12, 13)



அய்யாமுத் தஷ்ரீக் எனும் நாட்களின் அமல்கள்

பிறை 11, 12, 13 ஆகிய நாட்களில் இரவின் பெரும் பகுதியை மினாவில் தங்கி கழிக்க வேண்டும். *

விரைவாக, ஊர் திரும்ப விரும்புகிறவர் பிறை 12 ஆம் நாளன்று கல் எறிந்துவிட்டு மினாவிலிருந்து வெளியேறிவிடலாம்.
ஆனால் **சூரியன் மறைவதற்குள்** மினாவை விட்டு வெளியேறிவிட வேண்டும்.


தொழுகைகளை ஜமாஅத்துடன் **4 ரக்அத் தொழுகைகளை 2 ரக்அத் ஆக சுருக்கி** நிறைவேற்ற வேண்டும்.

தொழுகைகளுக்குப் பிறகு தக்பீர் சொல்லவேண்டும். மற்ற நேரங்களிலும் அதிகம் தக்பீர், திக்ருகள் செய்தவாறு இருக்கவேண்டும்.

சூரியன் **பகலின் நடுப்பகுதியை கடந்தபின்** ஜம்ராக்களுக்குச் சென்று கல் எறியவேண்டும்.
முதலில் **சின்ன ஜம்ராவில்** நின்று ஏழு கற்கள் ஒன்றன்பின் ஒன்றாக ஒவ்வொரு முறையும் தக்பீர் கூறி எறியவேண்டும்.
கல்லேறிந்த பிறகு கிப்லாவை முன்னோக்கி, நீண்ட நேரம் நின்று **துஆ கேட்க** வேண்டும்.
பிறகு, **நடு ஜம்ராவிற்குச்** சென்று முதல் ஜம்ராவில் செய்தது போன்று ஏழு கற்கள் ஒன்றன்பின் ஒன்றாக தக்பீர் கூறி எறிய வேண்டும்.
பிறகு, அங்கும் கிப்லாவை முன்னோக்கி, நின்று **நீண்ட நேரம் துஆ** கேட்கவேண்டும்.
பிறகு, **ஜம்ரதுல் அகபா** செல்லவேண்டும். அங்கு மேற்கூறிய முறையில் ஏழு கற்களை ஒன்றன் பின் ஒன்றாக எறிந்த பிறகு நிற்காமல் உடனே திரும்பிவிட வேண்டும்.



இறுதி தவாப் (தவாப்புல் விதா)



ஹாஜி தமது ஊர்/நாட்டிற்குத் திரும்பிச் செல்ல நாடினால் மக்காஹ் சென்று இறுதியாக தவாப்புல் விதா செய்து விட்டு ஊர் திரும்ப வேண்டும். நபி (ஸல்) கூறினார்கள் “கஅபாவை இறுதியாக தவாஃப் செய்யாமல் உங்களில் யாரும் திரும்பிச் செல்ல வேண்டாம்”.

ஹஜ் செய்முறை விளக்கப்படம்





تقبل الله منا ومنكم

அல்லாஹ் உங்களுடைய

ஹஜ்ஜை ஏற்றுக்கொள்வானாக !!!

ஹஜ்ஜுன் மப்ரூர்

இந்த பவர் பாயிண்ட் விளக்கக் காட்சி செய்வதற்கு உதவிய நூல்கள்

- ஹஜ்ஜும் உம்றாவும் -செய்வது எப்படி? (**அபூ காலித் உமரி**)
- ஹஜ் – உம்ரா வழிகாட்டி (**உமர் ஷரிப் இப்னு அப்துஸ் ஸலாம்**)



Haad - Society of Islamic Guidance in Unaizah
جمعية هاد للدعوة والإرشاد وتوعية الجاليات في عنيزة

ஹாத் அழைப்பு மையம் உனைஸா – சவுதி அரேபியா

தொடர்புக்கு: +966539225551